## மாநிலத்தின் வளர்ச்சிக்கு நெடுஞ்சாலைத்துறையின் பங்கு முக்கியமானது!

## தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு ட்ரில்லியன் டாலராக உயர பாடுபடும்—

# முதலமைச்சரின் இலக்கினை நிறைவேற்றிட ஈடுபாட்டுடன் பணியாற்றிடுவீர்!

## நெடுஞ்சாலைத்துறைக் கருத்தரங்கில் – அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!




சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கூட்டரங்கில், பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , தமிழ்நாட்டின் பொருளாதாரம், ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த நெடுஞ்சாலைத்துறையின் பங்களிப்பு குறித்த கருத்தரங்கினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

**சென்னை, மார்ச் 7 -**

**“தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த பாடுபடும் முதலமைச்சரின் இலக்கினை நிறைவேற்ற நெடுஞ்சாலைத் துறையினர் பாடுபட வேண்டும்” என்று நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கருத்தரங்கைத் தொடங்கி வைத்து உரை யாற்றும்போது கூறினார்.**

சென்னை, கிண்டியிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய பயிற்சி மையக் கூட்டரங்கில், தமிழ்நாட்டின் பொருளாதாரம், ஒரு ட்ரில்லியன் டாலராக உயர்த்த நெடுஞ்சாலைத்துறையின் பங்களிப்பு தொடர்பாக கருத்தரங்கினை பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், நேற்று முன்தினம் (05.03.2025) தொடங்கி வைத்து உரையாற்றினார். நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மு.சரவணன் கருத்தரங்கில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

நெடுஞ்சாலைத்துறை தொழில் நுட்ப சிறப்பு அலுவலர் இரா.சந்திரசேகரனின் வாழ்த்துறையை தொடர்ந்து, நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குனர் தெ.பாஸ்கர பாண்டியன், முன்னிலை உரையாற்றினார். அதைத்தொடர்ந்து துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இந்திய தொழில்நுட்ப கழகத்தின் முன்னாள் பேராசிரியர் முனைவர் அ.வீரராகவன் கருத்தரங்கின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து உரையாற்றினார்.

இக்கருத்தரங்கில் அமைச்சர் எ.வ.வேலு கருத்தரங்கினை துவக்கி வைத்து உரை யாற்றுகையில்;

முதலமைச்சர் அவர்கள், 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி ஒரு ட்ரில்லியன் டாலர், அதாவது ரூ.83.5 இலட்சம் கோடி அமெரிக்க டாலராக வளர்ச்சி பெற செய்ய வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்து ள்ளார் என்பதை குறிப்பிட்டு, நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து உரையாற்றினார்கள்.

**வரிவிதிப்பு குறித்து அண்ணாவின் கருத்து!**

இந்திய பொறியியலின் தந்தை என்று புகழப்படுகின்ற பாரத ரத்னா விஸ்வேஸ்ரய்யர் அவர்களின் பிறந்த நாளை பொறியாளர் தினமாக கொண்டாடி கொண்டிருக்கிறோம் என்பதை குறிப்பிட்டு, பேரறிஞர் அண்ணாவும் அவதரித்த இத்திருநாளில் அவர் காட்டிய வழியில் தமிழ்நாடு வளர தொடங்கியது என்று தெரிவித்தார்.

The Planned Economy of India என்ற நூலினை 1934 ஆம் ஆண்டு விஸ்வேஸ்ரய்யா வெளியிட்டார். அந்த நூலில் வேளாண்மைப் பணிகளில் இருந்து, மக்களைத் தொழிற்சாலைகளை நோக்கி ஈர்க்க வேண்டும் என்று தெரிவித்தார். அந்தக் கருத்தினைப் படித்தவர்கள் பெரிதும் வரவேற்றார்கள். பொருளாதார வளர்ச்சிக்கான விஞ்ஞான திட்டமிடுதல் அப்போது தான் தொடங்கியது என்றும், மாநிலத்தின் வளர்ச்சிக்கு நெடுஞ்சாலைத் துறை மிகப் பெரிய பங்களிப்பினைத் தருகிறது. முதலமைச்சர் வழங்கியுள்ள இலக்கினை அடைவதற்கு நீங்கள் ஈடுபாட்டுடன் பணியாற்றிட வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

**முதல்வருக்கு “ஆசிய மனிதவள மேம்பாட்டு விருது!”**

கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாடு முதலமைச்சருக்கு “ஆசிய மனிதவள மேம்பாட்டு விருது“ வழங்கப்பட்டது. அந்த விருது ஆசியாவிலேயே மிகவும் புகழ் பெற்றது. ஏற்கெனவே பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபர் ஜெனரல் ஃபிடல் ப்ரோமோஸ், போஸ்னியா குடியரசு பிரதமர் போன்ற பெருமக்கள் அந்த விருதினைப் பெற்றிருக்கிறார்கள். யார் மனிதவள மேம்பாட்டிற்கு மிகச் சிறந்த பங்களிப்பினை நல்கி அதன் மூலமாக சமூகத்தின், வணிகத்தின், பொருளாதாரத்தின் வளர்ச்சியில் மிகச் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார்களோ, அவர்களுக்கே இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருதுக்குப் பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுக்கக் கூடிய குழுவில் பஹ்ரைன் நாட்டினுடைய முன்னாள் அமைச்சர் பாஹிமி பின் அலி ஐஜோடர் போன்ற பெருமக்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இந்த விருது தகுதி உரையில், முதலமைச்சர் திறன் மேம்பாட்டிற்காக மிகச் சிறந்த முன்னெடுப்பு களைச் செய்துள்ளார் என்றும், அதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தமிழ்நாட்டில் பயன்பெற்று இருக்கிறார்கள் என்றும், குறிப்பிட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அல்லும் பகலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பற்றியும், இளைஞர்களின் வேலைவாய்ப்பு பற்றியும் மட்டுமே சிந்தித்து வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் தமிழ்நாட்டின் பொருளாதாரம் பன்மடங்கு உயர வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

2009 ஆம் ஆண்டு, முதலமைச்சருக்கு அண்ணா பல்கலைக்கழகம் “டாக்டர்“ பட்டம் வழங்கியுள்ளது. டாக்டர் பட்டம் வழங்கியது தொழில்நுட்ப பல்கலைக் கழகம் என்பதால், பொறியாளர்களாகிய நீங்கள் இன்னும் கூடுதலாகப் பெருமை கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**2030 - க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 3 மடங்கு உயர்த்த வேண்டும்!**

நவீன பொருளியலின் தந்தை ஆடம் ஸ்மித், பொருளாதாரம் பற்றி, உற்பத்தி, பகிர்தல், நுகர்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய செல்வத்தினை விஞ்ஞானப்பூ ர்வமாக ஆராய்வதே பொருளாதாரம். ஒரு நாட்டின் செல்வச்செழிப்பினையும், பொருளாதார வளர்ச்சியினையும் அளவிடுவதற்கு GDP என்பது ஒரு குறியீடு. GDP(Gross Domestic Product) என்பது ஓராண்டில் ஒரு நாட்டில் அல்லது ஒரு மாநிலத்தில் செய்யப்படும் மொத்த உற்பத்தியாகும். எனவே, GDP எனபது பொருள் (Goods) உற்பத்தி மற்றும் சேவை (Services) உற்பத்தி ஆகிய இரண்டின் மொத்த மதிப்பாகும்.

இந்த உள்நாட்டு உற்பத்தியை தமிழ்நாட்டில் ஒரு ட்ரில்லியன் டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்பது தான், முதலமைச்சர் அறிவித்திருக்கிற இலக்கு ஆகும். ஒரு ட்ரில்லியன் என்பது ஒரு இலட்சம் கோடி ஆகும். இப்போது தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தி கிட்டத்தட்ட ரூ.30 இலட்சம் கோடியாகவும், வளர்ச்சி ஏறத்தாழ 15% சதவீதமாகவும் உள்ளது. எனவே, 2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 3 மடங்கு உயர்த்திட வேண்டும் என்று, முதலமைச்சர் அவர்கள் இலக்கு ஒன்றை வரையறுத்துக் கொண்டு திட்டங்களைத் தீட்டி வருகிறார் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, இந்தியாவில் 2வது பெரிய பொருளாதாரமாகத் தமிழ்நாட்டின் பொருளாதாரம் உள்ளது. மகாராஷ்டிரம் மாநிலம் முதலாவது இடத்தில் உள்ளது என்று தெரிவித்தார்.

**முதலமைச்சர் இரவு பகல் பாராது உழைக்கிறார்!**

முதலமைச்சர் அவர்கள், வழங்கியுள்ள இலக்கினை அடைய ஆண்டு GDP வளர்ச்சி 25% சதவீதமாக இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆண்டு வளர்ச்சி 15% சதவீதமாக உள்ளது. ஏறக்குறைய 2 மடங்கு வளர்ச்சி விகிதத்தினை எட்டினால்தான் இலக்கினை அடைய இயலும் என்பதால், முதலமைச்சர் அவர்கள், இரவுபகல் பாராது உழைக்கிறார். இப்போதும் இந்தியப் பொருளாதாரத்திற்குத் தமிழ்நாடு 9.0% சதவீதப் பங்களிப்பினை வழங்குகிறது. செல்வம் கொழிக்கிற மாநிலமாகத் தமிழ்நாடு திகழ வேண்டும் என்பதே முதலமைச்சர் அவர்களின் எண்ணமாகும் என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

GDP வளர்வதால், மக்கள் வாழ்க்கைத்தரம் உயரும், நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பொருளாதார தற்சார்பினை (Economic Indepen dence) உருவாக்கிப் பேரம் செய்யும் வலிமையை (Bargaining Power) வழங்கும். முதலீடுகளை ஈர்க்கும் வலிமையும் அதனால் வேலைவாய்ப்பு பெருகுகிற சூழலும் உருவாகும். உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கிடவும், கல்வி வசதியினை வழங்கிடவும், சுகாதார வசதிகளை மேம்படுத்திடவும் அதிக நிதியினை அரசு செலவு செய்ய முடியும். அதிகப் பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடு மிகுந்த மதிப்பையும் நன்னம்பிக்கையையும் உலக நாடுகளுக்கிடையே பெற முடியும். சமுதாய வளர்ச்சி வேகமாக இருக்கும் ஆகிய நன்மைகள் விளைகிற காரணத்தால்தான், முதலமைச்சர் அவர்கள், ஒரு ட்ரில்லியன் டாலர் அளவிற்குப் பொருளாதாரம் வளர வேண்டும் என்று விரும்புகிறார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வரிவிதிப்பு தொடர்பாகத் தெரிவித்த கருத்து என்ன வென்றால், (“Tap the Rich, Pat the Poor”) “செல்வந்தர்களிடம் வரியைப் பெற்று ஏழைகளுக்குச் செலவு செய்ய வேண்டும்“. எனவே, நிறைய செல்வந்தர்கள் இருந்தால் நிறைய வரி வசூலாகும். அதைக் கொண்டு ஏழைகளின் வாழ்வு மேம்பட அருமையான திட்டங்களைத் தீட்ட முடியும். கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை உருவாக்கிட முடியும் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார் என்று அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்.

இவற்றையெல்லாம் சிந்தித்துதான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகத் திகழ்ந்தபோது, 1971 ஆம் ஆண்டு மாநில திட்டக்குழுவினைத் தோற்றுவித்தார். மனித வளர்ச்சிக் குறியீடுகள் (Human Development Index) பலவற்றில் இந்திய அளவில் தமிழ்நாடு முதலில் இருப்பதற்கு அன்று அடித்தளமிடப்பட்டது. அதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்கள் வாழ்வும், கல்வி வளர்ச்சியும் எனது இரு கண்கள் என்று சொல்கிறார் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகளின் வளர்ச்சி மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகும். நல்ல சாலைகளினால், “போக்குவரத்து எளிதாகிறது, உற்பத்தியான பொருள்களைச் சந்தைப்படுத்துவது எளிதாகிறது, வேலைவாய்ப்புப் பெருகுகிறது, சுற்றியுள்ள பகுதிகளில் பொருளாதாரம் வளர்க்கிறது, போக்குவரத்துச் செலவு மிகவும் குறைகிறது, போக்குவரத்து வசதி உருவாக்கும் போட்டியின் காரணமாக முதலீடு அதிகரித்து வணிகம் வளர்கிறது“ என்றும், பல நாடுகளின் வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால், சாலை கட்டுமானப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு 1% சதவீதம் அதிகரித்தால், GDP ஏறக்குறைய 0.06% முதல் 0.12% வரை உயர்கிறது என்று அமைச்சர் எடுத்துரைத்தார்.

**முதல்வரின் சிறப்பான ஆட்சி!**

முதலமைச்சர் அவர்கள், மாநிலத்தில் இருந்து வறுமையை விரட்ட வேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிற காரணத்தில்தான், இப்படிப் பல்வேறு இலக்குகளை நிர்ணயித்து பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார். “வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்“ என்பது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழக்கங்களிலேயே தலையாயது, வறுமையை வெல்வதற்கு நேரடியான வறுமை ஒழிப்புத் திட்டங்களை அமல்படுத்துவது மட்டும்தான் சாத்தியக்கூறு. பொருளாதாரத்தை உயர்த்தி, வேலைவாய்ப்பினை பெருக்கி, வறுமையை வெல்ல முடியும் என்பதால்தான், பொருளாதார வளர்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக ஆட்சியை நடத்தி கொண்டிருக்கிறார் என்று தெரிவித்தார்.

வழக்கமாகப் பொருளாதார வளர்ச்சி என்பது சராசரி தனி மனித வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகிறது. ஆனால், நாம் திட்டமிடும் வளர்ச்சி என்பது “எல்லோருக்கும் எல்லாமும்“ என்பதுதான் “திராவிட மாடல்“ வளர்ச்சி“. இந்த வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பு மிகமிக முக்கியமானது. ஏனென்றால், சாலைகள்தான் ஒரு பகுதி பொருளாதார வளர்ச்சியினை இன்னொரு பகுதிக்குக் கொண்டு போய்ச் சேர்க்க முடியும். ஆகவே, நெடுஞ்சாலைத்துறையின் பங்கு மாநிலத்தின் வளர்ச்சியில் மிக முக்கியமானது என்பதைப் பொறியாளர்கள் நன்கு நினைவில் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

**மூலதனச் செலவில் முதலிடத்தில் நெடுஞ்சாலைத் துறை!**

நெடுஞ்சாலையை சார்ந்த அனைவரும் நினைத்தால் நெடுஞ்சாலைத்துறை பொருளாதார வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும். பொறியாளர்கள் நினைத்தால் பாலத்தையும் சாலையையும் விரைவாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர முடியும். 2009 ஈசிஆர் சாலையை அமைக்க நிலஎடுப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டது. தற்போது, நிலஎடுப்புப் பணிக்கு ரூ.1000 கோடி தேவைப்படுகிறது. ஒரு பொறியாளர் நினைத்திருந்தால், அப்போதே இந்த சாலையை முடித்து இருக்கலாம். அரசு நிதி சேமிக்கப்பட்டு, பொருளாதாரம் வளர்ச்சி அடைய பேருதவியாக இருந்திருக்கும். நெடுஞ்சாலைத்துறை மக்களோடு மக்களாக பின்னி பிணைந்துள்ள துறை.

பொறியாளர்கள் பொறுப்புடன் செயல்பட்டிருந்தால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி பயனடைந்திருக்கும். அரசாங்கத்திற்கு Capital Expenditure இருந்தால் தான் முழுமையாக பணியாற்றுகிறது என்று பொருள். மூலதன செலவில் முதலிடத்தில் நெடுஞ்சாலைத்துறை தான் சிறப்பாக செயல்படுகிறது என்பதை சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளேன் என்றும், மாநிலத்தின் வளர்ச்சியும் நெடுஞ்சாலைதுறையின் வளர்ச்சியும் ஒப்பிட்டு பார்த்தால் நெடுஞ்சாலைத் துறையின் பங்கு அதிகமாக உள்ளது என்று தெரிவித்தார்.

**கலைஞர் ஆட்சியில் தொழில் வளர்ச்சி!**

காங்கிரஸ் ஆட்சியில் கொங்கு நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டார். விவசாய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தவர். அதைதொடர்ந்து எம்.எஸ்.சுவாமிநாதன் விவசாயத்தில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து விவசாயத்தில் புதுமைகளை புகழ்த்தியதால், விவசாயம் இன்று பெருகி உள்ளது

ஐந்து முறை முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டில் தொழிலாளர்களுக்கு பெரிதும் பங்காற்றியவர். அதனால்தான் சிப்காட், சிட்கோ போன்ற தொழில் நிறுவனங்கள் உருவாக்கியதால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது.

சிறு குறு தொழில்கள் மேம்படுத்த பல திட்டங்களை செயல்படுத்தினார். இதன் அடிப்படையில்தான், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்று, தற்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பல வெளிநாடுகளுக்கு சென்று, முதலீட்டாளர்களை அழைத்து வந்து, தொழிற்சாலைகளை உருவாக்கி வருகிறார்கள். கடந்த ஆண்டு ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று முதலீட்டாளர்களை அழைத்து, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

அதன் அடிப்படையில் முதலமைச்சர் அவர்கள் “எல்லோருக்கும் எல்லாமும்“ கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஜான் கென்னடி அவர்கள் அமெரிக்காவை பணக்கார நாடு என்று சொல்கிறார்கள். சாலை சிறப்பாக இருந்தால்தான் நாடு பொருளாதாரத்தில் சிறப்பான நாடாக இருக்கிறது. சாலைகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

**முதன் முதலாக சாலையில் கட்டப்பட்ட அண்ணா மேம்பாலம்!**

சென்னையில் ஜெமினி ஸ்டூடியோ இருந்த இடத்தில், நான்கு சாலைகள் சந்திக்கிற இடமாக இருந்ததால் முதன் முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு பாலத்தை கட்டினார்கள். தென்னிந்தியாவிலேயே இதை போன்ற பாலம் கட்டப்படவில்லை. ஆற்றில் பாலம் கட்டுவார்கள், ஓடையில் பாலம் கட்டுவார் . முதன்முதலாக சாலையிலேயே பாலம் கட்டப்பட்டது “அண்ணா மேம்பாலம்“தான் அந்த பாலம் நெடுஞ்சாலைப் துறையின் பராமரிப்பில் தான் உள்ளது.

**அமெரிக்க டாக்டர் பாராட்டு!**

15 தினங்களுக்கு முன்னால், அமெரிக்காவில் இருந்த வந்த டாக்டர் ஒருவர், முதலமைச்சர் அவர்களிடம் அமெரிக்காவில்கூட இதைப்போல வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பாலத்தை பார்க்கவில்லை என்று பாராட்டியுள்ளார்.

சைதாப்பேட்டைக்கும் தேனாம்பேட்டைக்கும் இடையில் அண்ணா அறிவாலயம் அருகில், 3 கிலோ மீட்டருக்குமேல், ஒரு பாலத்தை அமைக்கப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால், பயண நேரம் குறைவதுடன், எரிபொருள் குறைவாகும். விவசாய பொருட்களை சந்தைப்படுத்த உதவியாக இருக்கும். விவசாய பொருட்களை சந்தைப்படுத்த, நெடுஞ்சாலைகள் பேருதவியாக இருக்கும். தென்னகத்திலேயே தமிழ்நாட்டில் சாலைகள் நன்றாக இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்கிறார்கள். உற்பத்தி செய்கின்ற பொருட்களை சந்தைப்படுத்த சாலைகள் சிறப்பாக இருக்க வேண்டும்.

1984-1985இல் தான் தமிழ்நாட்டில் மிஷின் மூலம் சாலை போடப்பட்டது. புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடிப்பதால், தொழில் வளர்ச்சி ஏற்பட்டு, பொருளாதார நிலை உயர்கிறது. தமிழ்நாட்டு பொறியாளர்களை, வெளிநாட்டிற்கு அனுப்பி, நவீன தொழில் நுட்பங்களை கண்டறிந்து வந்து, உலகிற்கு வழிகாட்டும் மாநிலமாக தமிழ்நாடு முன்னிலையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் சுவாமி விவேகானந்தர் பாறைக்கும் 190 மீட்டர் நீளமுடைய கண்ணாடி பாலம் நெடுஞ்சாலைத்துறையால் அமைக்கப்பட்டுள்ளது. பயனாளிகளுக்கு தற்போதுள்ள படகு போக்குவரத்து போதுமானதாக இல்லை என்பதால், புதிதாக மூன்று படகுகள்(Boat) வாங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

**உலகிற்குத் தெரியக்கூடிய குமரி கண்ணாடி பாலம்!**

திரிபுரா கவர்னர், கன்னியாகுமரியில் உள்ள கண்ணாடி பாலத்தை பார்த்து ரசித்த புகைப்படத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தகவலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த கண்ணாடி பாலம் வெளிமாநிலத்தவர்களுக்கு மட்டுமல்லாமல், உலகிற்குத் தெரியக்கூடிய அளவில் உள்ளது. இதனால், சுற்றுலா வருவாய் அதிகமாகும் என்று தெரிவித்தார்கள். தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழி வைக்கிறது என்று எடுத்துரைத்தார்கள்

இந்த கருத்தரங்கில், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் கு.கோ.சத்திய பிரகாஷ், ச.ஜவஹர் முத்துராஜ், மு.பன்னீர்செல்வம், ஜெ.தேவராஜ், திருமதி.இரா.விமலா, திருமதி. எஸ்.உஷாதேவி, முதன்மை இயக்குநர் இரா.செல்வதுரை, செபஸ்டின் செல்வின் சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




திமுக.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–7 க்கு உட்பட்ட திருவாரூர் மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.03.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | திருவாரூர் | மலர் மஹால், வடசேரி சாலை, மன்னார்குடி. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 04-03-2025

